Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது மார்கழி 20 ஆம் நாள் ஷஃபான் 13 4-1-64 சனிக்கிழமை இதழ் 328

விற்பனையாகிறது!

ஈழநாடு
தினக்குறிப்பு
1964

விலை ரூபா 1-00

# எஸ்ஜேவி. தலைமையில் அடுத்தவாரம் மறியல்

## இன்சூரன்ஸ் ஸ்தாபனம் முன் ஆரம்பிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், சனி

**தமிழ் பேசும் மக்கள் மீது சிங்களத்தைத் திணிக்கும் அரசாங்கத்தின் சிங்களச் சட்ட அமுல் திட்டத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சி ஆரம்பித்துள்ள இயக்கத்தின் இரண்டாவது அம்சமான மறியல் இயக்கம் யாழ்ப்பாணத்தில் அடுத்த வாரப் பத்தியில் ஆரம்பிக்கப்படுமென அறியப்படுகிறது.**

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தின (இன்சூரன்ஸ் கூட்டுஸ்தாபனம்) யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயம் முன் தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் அடுத்த புதன் கிழமை தொண்டர்கள் மறியல் இயக்கத்தை ஆரம்பிப்பார்களெனத் தெரியவருகிறது.

காப்புறுதிக் கூட்டுஸ்தாபன யாழ்ப்பாணக் கிளையில் சிங்களத்தில் பற்றுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றனவென்றும் இதனல் பொதுமக்கள் கஷ்டமடைகிறார்களென்றும் சிங்களத்தில்பற்றுச்சீட்டு வழங்குவதை நிறுத்தி தமிழில் பற்றுச்சீட்டு வழங்க உத்தரவிடுமாறு கோரியும் இல்லையேல் நிலைமை மோசமாகுமென்று தெரிவித்தும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் மூவர் காப்புறுதிக் கூட்டுஸ்தாபன அதிபருக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளனர்.

இதற்குச் சாதகமான பதில் கிடைக்காவிடில் அல்லது தொடர்ந்தும் சிங்களத்தில் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டால், அடுத்த வாரத்தில் அநேகமாக அடுத்த புதன்கிழமை யாழ்ப்பாணம்காப்புறுதிக்கூட டுஸ்தாபனக்கிளைக்காரியாலயத்தின்முன்றலில்மறியல் இயக்கம் ஆரம்பிக்கப்படுமென தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் அடுத்த திங்கட்கிழமை கொழும்பில் கூடி நிலைமையை ஆராய்வர்களென்றும் கூந்தக் கூட்டத்தில் மறியல் இயக்கம் பற்றி இறுதி முடிவு செய்யப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

பற்றுச்சீட்டு வழங்குவது சம்பந்தமாக புதிய உத்தரவெதுவும் வரவில்லையென்றும் மேலிடத்தின் உத்தரவுப்படி நடப்பதே தங்கள் கடமையென்றும் காப்புறுதிக் கூட்டுஸ்தாபன யாழ்ப்பாணக்கிளை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## தமிழரை அழிப்பது பெரும்பான்மையினர் விருப்பமானல் அதுஜனநாயகமா?

### பிரதமர் அறிக்கைக்கு தமிழரசு கேள்வி

தமிழரசுக்கட்சி நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் எந்த நேரமும் செயலில் இறங்கத் தயாராக இருப்பதாகவும் நிலைமையை விழிப்புடன் அவதானித்துவருவதாகவும் தெரிவித்துள்ளது. பிரதமரின் புதுவருடச் செய்தி பற்றியும் குறிப்பிடும் அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிங்களத்தில் கருமமாற்றும் அரசாங்க காரியாலயங்களின் முன் ஜனவரி 2-ம் திகதி தொடக்கம் மறியல் இயக்கம் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனல் தமிழ் பிரதேசத்தில் சிங்களத்தைத் திணிப்பதற்கு மக்களுடைய ஏகோபித்த எதிர்ப்பைக்கண்ட அரசாங்கம் தனது செயல் முறையைத் தந்திரமாக மாற்றிக்கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க அலுவலகங்கள் ஒன்றிலாவது டிசம்பர் 31-ம் தேதி இருந்த நிலையிலிருந்து எவ்வித மாற்றத்தையாவது காணவில்லை.

இதைக்கொண்டு அரசாங்கத்தில் எந்தவிதமான மனமாற்றமாவது ஏற்பட்டு விட்டதாக நாம் ஏமாந்துவிடவில்லை. தமிழ் பேசும் மக்களுடைய இன்றைய ஏகோபித்த எதிர்ப்பு சிறிது தளர்ச்சியடைந்ததுடன் தமது மொழிக் கொள்கையினை தமிழ் மாகாணங்களில் அதிதீவிரமாக அமுல் நடத்தக் காத்திருக்கிறார்கள் என நாம் கருதுகிறோம். மேலும் இந்த மனச்சாட்சியற்ற அரசாங்கத்தினல் அக்கிரமமாகப் பழிவாங்கப்படக்கூடிய தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் அவல நிலையைப் பற்றியும் உணரத்தான் செய்கிறோம்.

நாம் விழிப்போடு ஜாக்கிரதையாக நிலைமையைக் கவனிக்கின்றோம். தனிச்சிங்களத்தை எம்மீது திணிக்கிறார்களென்று அல்லது தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்று கண்ட மாத்திரத்தே செயலில் இறங்கச் சித்தமாயிருக்கிறோம்.

**ஜனநாயகதத்துவத்துக்கு பிரதமரின் விளக்கம் தவறு**

பிரதமர் தமது புதுவருட செய்தியில் சிறுபான்மையினரைப்பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட்டிருக்கிறார். பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு இணங்கச் சிங்களத்தை நாட்டின் அரசகரும மொழியாக ஆக்கியது ஜனநாயக முறைக்கு அமைந்ததென்பது அவரின் கூற்று. சிங்கள மக்கள் விரும்புகிறார்களென்று தமிழினத்தை நிர்மூலமாக்குவதும் ஜனநாயகதத்திற்கமைவான செயலென்று ஒருவேளை அவர் கூறுவார் போலும்! திருமதி பண்டாரநாயகா ஜனநாயகதத்துவத்துக்கே ஒரு தவறான வியாக்கியானம் கொடுக்கிறார். திருமதி பண்டாரநாயகா தமது ஆட்சிமொழி எதுவாயிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கச் சிங்கள மக்களுக்கு உரிமையுண்டு. ஆனல் தமிழ் பேசும் மக்களின் ஆட்சி மொழி எதுவாக வேண்டுமென்பதை சிங்கள மக்கள் நிர்ணயிக்க முடியாது. இதை முடிவு செய்வது தமிழ் மக்களே பல்வேறு மொழி பேசும் இனங்கள் வாழும் தேசத்தில் கடைப்பிடிக்கவேண்டிய நியதியும் இதுவே.

## அரசாங்க ஊழியர் விஷயத்தில் மௌனம் ஏன்?

### இடதுசாரிக் கட்சிகள் பற்றி தமிழரசு வாலிபமுன்னணி தலைவர்கேள்வி

நல்லூர், சனி

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தினல் தமது வேலைகளையே இழக்க வேண்டிய நேரத்தில் அவர்களது உரிமைகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்காமல் இடதுசாரிக் கட்சிகள் மௌனம் சாதிப்பதின் காரணம் என்ன? என்று தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணித் தலைவர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை விடுத்த அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளார்.

இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். நடேசன், தமிழரசுக்கட்சியின் சிங்கள எதிர்ப்புப் போராட்டம் வெற்றியளிக்க முடியாதென விடுத்துள்ள அறிக்கைக்கு பதிலளிக்குமுகமாகவே இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. திரு. கதிரவேற்பிள்ளை தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தபோது ஏனைய பகுதியிலுள்ள தொழிலாளர்கள் அதில் கலந்து கொள்ளாத காரணம் என்ன? சிங்களத் தொழிலாளர்களின் 1 ரூபாய் சம்பள உயர்ச்சிக்கு போராடும் இடதுசாரி தொழிற்சங்கங்கள் தமிழ் பேசும மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதுவித போராட்டமும் செய்யாமலிருப்பதன் காரணமென்ன? இதிலிருந்து தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க தாமாகவே போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பது முடிவு. இராவணன் சபையிலே, விபீஷணன் நீதி கூறினனே தவிர இராவணனது ஆட்சியை மாற்ற முடியவில்லை. இராமனின் வில் தான் இராவணனது ஆட்சியை மாற்றியது. இந்த நிலைதான் எமக்கு ஏற்பட்டுள்ளது!

—

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு மக்கள் கள் இறக்குவதற்கு மரங்கள் கொடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது. கள் இறக்க மரங்கள் கொடுக்காமல் விடுவதனல் மது அருந்துவோர் வெகுவாகக் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சிங்கள ஊழியர் இடமாற்றம்

நல்லூர், சனி

யாழ்ப்பாணம் தேர்தல் கந்தோரில் இது வரையும் கடமையாற்றி வந்த மூன்று சிங்கள ஊழியர்களில் இருவர் வெளி இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். அவர்களின் இடங்கள் இப்போது நிரப்பப்படாமலேயே இருக்கின்றன.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றைய தினம் இழுக்கப்பட்ட 28-வது கைத்தொழில் சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு:
01 N 0879—20,000 ரூபா.

இரண்டாவது பரிசு:
19 M 0327—10,000 ரூபா.

மூன்றாவது பரிசு:
02 B 0880—4930 ரூபா.

(6-ம் பக்கம் பார்க்க)

**உங்கள் கட்டிடங்கள்**

உறுதியாக இருப்பதற்கு

திறமான

★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்

எம்மிடம்

பெற்றுக் கொள்ளலாம்

விஷ்ணு

**ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ்**

வல்வெட்டித்துறை

## மணிவாக்கு

புதிய சகாப்தம் ஆரம்பமாகிவிட்டது. இதில் கடவுளுக்கே வழியுரிமை இருக்கும்.

— பிராங்க்புக்மன்

ஈழநாடு

EELA NADU

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna

Phone 389

யாழ்ப்பாண ஈழசோபகிருது ஆண்டு மார்கழி மீ 20 உ (4 1 64)

## காணவில் அதிருப்தி

ஆபிரிக்கத் தலைவர் டாக்டர் நிக்ருமாவைச் சுட்டுக்கொல்ல நேற்று முன் தினம் நடைபெற்ற முயற்சியிலிருந்து அவர் தப்பியது தெய்வச்செயலாகும். கானு அதிபர் நிக்ருமாவின் உயிருக்கு உலைவைக்க இதற்கு முன்பல தடவைகள் முயற்சி செய்யப்பட்டபோதிலும் அவர் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டார்.

கானவில் இப்போது ஏற்பட்டுள்ள அதிருப்தியின் விளைவே இந்தக் கொலை முயற்சி என்பதில் சந்தேகமில்லை. டாக்டர் நிக்ருமா அந்த நாட்டில் மிகவும் செல்வாக்குப் பெற்ற தலைவராய் ஒரு சமயம் விளங்கினர். அந்த நாட்டின் சுதந்திரத்திற்காக அவர் போராட்டம் நடத்தியவர். எனினும் அவர் பதவி ஏற்றபின் அங்கு நடைபெற்ற சம்பவங்கள் அவருக்குபெரளவு எதிர்ப்பை மூட்டியிருக்கின்றன. கானவில் எதிர்க்கட்சிகளை அவர் சகிக்கவில்லை. பலர் அங்கு சிறைப்படுத்தப்பட்டிருக்கிருர்கள். பல ஆண்டுகளாக அமுலிலிருந்த தடுப்பக்காவல் சட்டம் மேலும் பல வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது. நாட்டுக்கு விரோதமா சுச்சதி செய்ததாகக் கூறி அரசாங்கத்தினல் குற்றஞ்சாட்டப்பட்ட சிலரை விடுதலை செய்ததற்காக அந்நாட்டுப் பிரதம நீதிபதியையும் ஜனதிபதி நிக்ருமா பதவிநீக்கம் செய்தார். இதைச் சர்வதேச நீதிபரிபாலனசபைக் கமிஷனும் கண்டித்திருக்கிறது.

இது ஒருபுறமிருக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், ஹைகோர்ட் நீதிபதிகள் ஆகியோரைப் பதவிநீக்கம் செய்யும் அதிகாரத்தை ஜனதிபதிக்களிக்கவும், நாட்டில் ஏககட்சி ஆட்சிக்கு வழிசெய்யவும் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த இம்மாதம் கானவில் வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? நீதியும் நிர்வாகமும் ராணுவமும ஒரு தனிமனிதனின் கையில் இருக்கும்போது நாட்டுமக்கள் பூதியுடனே வாழ வேண்டியிருக்கும் என்பதையே காட்டுகின்றன. சர்வாதிகாரவிரோத சக்திகளே ஜனதிபதி நிக்ருமாவின் உயிருக்கு உலைவைக்க முயன்றிருக்கின்றன.

கானவில் மட்டுமின்றி புதிதாகச் சுதந்திரம் அடைந்த மற்றும் சிலநாடுகளிலும் சர்வாதிகார ஆட்சிகள் ஏற்பட்டு வருகின்றன. இந்தோனேஷியா, பாகிஸ்தான், பர்மா, தென்வியட்னும், எகிப்து, சிரியா, ஈராக் போன்ற எத்தனையோ நாடுகள் இருக்கின்றன. ஜனநாயகம் இங்கு தோல்வியடைந்துவிட்டதுதான் இவ்வித ஆட்சிக்குக் காரணமா? பிரிட்டிஷ் ஜனநாயகம் பாகிஸ்தானுக்கு ஒத்துவராது என அதிபர் அயூப்கான் கூறுவது ஒருவேளை சரியாக இருக்குமோ.

ஆசியாவில் இந்தியாவைத் தவிர வேறுநாடுகளில் ஜனநாகம் வெற்றிகரமாகச் செயல்படவில்லை. இந்தியாவிலும் பெரும்பான்மை மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தலைமை இருப்பதுதான் ஜனநாயக வெற்றிக்குக் காரணமாகச்சிலர் சொல்கிருர்கள். ஜனநாயகம் நல்லதா சர்வாதிகாரம் நல்லதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் எவரும்ஜனநாயகத்தையே தெரிவு செய்வர். ஆனல் ஜனநாயக ஆட்சியில் அரசியல்வாதிகள் நாயும் பூனையுமாகஅடித்துக் கொள்வதையும் பார்க்கிறேம். எனவே இதற்கு மாற்றுவழி என்ன?

கானவிலும்சரி, வேறுஎங்கிலும்சரி நாட்டின் அதிபர் மக்களின் நேரடி வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இப்படிச் செய்வதின்மூலமே பெரும்பான்மை மக்களின் பிரதிநிதியைத் தெரிவுசெய்ய முடியும். இதற்கு அமெரிக்கா உதாரணமாய் விளங்குகிறது. அமெரிக்க ஜனதிபதி இந்திய ஜனதிபதியைப் போல் அல்லாமல் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிருர். இப்படி நாட்டின் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுபவர்.வயது, அனுபவம், ஆற்றல், நிதானம், ஜனநாயகப் பண்புகள் நிறைந்தவராய் இருக்க வேண்டும். இப்போது ஜனநாயகம் தோல்வியுற்ற நாடுகளிலே சர்வாதிகாரஆட்சி இருக்கிறது. இந்தச் சர்வாதிகாரிகள் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றவர்கள் என்று கூறமுடியாது.

சுதந்திரம் பெற்ற புதியநாடுகளில் புலசிக்கல்கள் இருக்கின்றன. இவ்வித நாடுகளில் சர்வாதிகாரிகள் ஆட்சியைக் கைப்பற்றும்போது நாட்டின் தலைமையை மக்களின் நேரடித் தேர்தலின்கீழ் கொண்டுவருவது பயனுள்ளதாய் இருக்கும். அதேசமயம் யாருக்கு வாக்களிப்பது என்பதை அறியாத கல்வியறிவற்ற பாமரராய், மக்கள் விளங்குவதும் ஒரு துரதிருஷ்டவசமான நிலைமையாகும். மக்களிடையே கல்வியைப் பரப்புவதும் ஜனநாயகம் வெற்றிபெறுவதற்கான காரணங்களில் ஒன்ருய் இருக்கும்.

எதுவாயினும் கானவில்அதிபர் நிக்ருமாவின் ஆட்சியில் கோளாறு இருக்கிறது என்பதையே, கொலை முயற்சிகள் காட்டுகின்றன. திறமைசாலியான அவர் ஜனநாயக சக்திகளைக் கூண்டுக்குள்ளிலிருந்து அவிழ்த்துவிடுவதின் மூலமே அங்கு பிரதிநிதித்துவ ஆட்சி ஏற்பட முடியும்.

## 'எண்ணெகாப்பரேசனை உடனடியாக மூடவும்'

கொழும்பு, வெள்ளி

சீதுவையிலுள்ள எண்ணை கொழுப்பு காப்பரேசனை உடனடியாக மூடவேண்டுமென்றும், புதிய சபையொன்றை நியமிக்கவேண்டுமென்றும் கொழும்பு புதிய பஜார் சுதந்திரகட்சி, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் நேற்று ஒரு மகஜரை சமர்ப்பித்திருக்கிறது.

கொழும்புக் கடிதம்

# யு. என். பி. க்கு நிக்கவரட்டியா! பொதுத்தேர்தலா இல்லையா?

## மலாயாவில் பிறந்தபெண்ணை மணம்முடித்த எம். பி. திண்டாட்டம்!

— நமது நிருபர் —

பிரதமர் சிறிமாவுடைய தலைமையில் சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர் நடைபெற்ற இடைத் தேர்தல்களுக்கெல்லாம் சிகரம் வைப்பது போல் நிக்கவெரெட்டியாத் தொகுதியில் நாளைய வாக்களிப்பிருக்கப் போகிறது. இதற்குக் காரணம் நாட்டில் நிலவிவரும் பற்ருக்குறையும் பஞ்சமும் தான் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

டார்லிமெண்டிலுள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் சுதந்திரக்கட்சி நாட்டில் பலமிழந்துவிட்டதென்று கருதுகின்றன ஒரே மூச்சில் எதிர்த்து சுதந்திரக் கட்சியை வழியனுப்பி வைத்துவிட்டு மாற்றரசாங்கமொன்றை வரவேற்கவேண்டுமென்றும் விரும்புகின்றன.

இதன் எதிரொலிதான் இன்று நிக்கவெரெட்டியாத் தொகுதியில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

நிக்கவெரெட்டியாத் தொகுதியில் தமக்கு ஆதரவில்லையென்று கருதிய எதிர்க்கட்சிகளெல்லாம் ஆரம்பத்திலேயே பின் வாங்கிக் கொண்டன. ஆனல் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களின் மூலம் தனது பலத்தை அளவை செய்துள்ள யு. என். பி. ஒரே முச்சில் தேர்தல் போரை ஆரம்பித்திருக்கிறது.

இந்தத் தொகுதிக்கு விஜயம் செய்து விட்டு கொழும்பு வந்துள்ள அனுபவஸ்தர்களான அவதானிகளில் அநேகர் யு. என்.பி. தான் வெற்றிவாகை சூடப்போகிறதென்றுகைக்கு மேற்கை போடுகிருர்கள்.

தற்போது எதிர் நோக்கியுள்ள பல பிரச்னைகளையும் ஆராய்ந்து பார்க்கும் போது மேற்கண்ட அவதானிகளுடைய மதிப்பு சரி வந்துவிடுமென்றே தோன்றுகிறது. இன்னும் 24 மணி நேரத்துக்குள் "நிக்கவெரெட்டியா யாருக்கு?" என்று தெரிந்து விடும்.

கடைசியாக பழுத்த யு. என். பி. வாதி ஒருவரிடமிருந்து கிடைத்த செய்தி 'வெற்றி நிச்சயம்' என்று கூறுகிறது. இதற்குக் காரணம் தேர்தல் தொகுதியில் பிரசாரம் செய்த மந்திரி ஒருவர் 'நிலைமை கவலைக்கிட'மென்று கூறி கொழும்பு திரும்பியது தானும்!

இத்தேர்தலில் எவர் வெற்றி பெற்ருலும் மயிரிழையில் உயிர் தம்பினர்' என்பதாகத் தான் இருக்கும்!

●

நிக்கவெரெட்டியா தேர்தல் பற்றி பேச்சடிபடும் இந்தச் சமயத்தில் பலவதந்திகள் காற்றில் மிதக்க விடப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று, இத்தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்ருல் சூட்டோடு சூடாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி விடப்போகிறதென்பதுதான். அப்படியில்லாமல் தோற்று விட்டால் தேர்தலே இல்லையாம்!

எண்ணைக் கம்பெனிகளை எடுத்தது, இன்ஷூரன்ஸ் சுவீகரிப்பு, தனிச்சிங்கள அமுல், வர்த்தக தேசியமயம் போன்றவைகளைப் பயன்படுத்தவும் இது நல்ல சந்தர்ப்பமென்று சுதந்திரக்கட்சிக்கு அநேகர் ஆலோசனை கூறியுள்ளார்களென்றும் பேச்சடிபடுகிறது.

●

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் வந்தபோது ஏதோ விந்தையிலும் விந்தையாக வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர் நடந்து ககாண்டாரென்றும் அதை வெளி நாட்டிலாகா கண்டித்துள்ளது என்றும் சில நாட்களுக்கு முன்னர் ஓர் ஆங்கில தினசரியும், தமிழ் சகோதரியும் வெளியிட்ட செய்தி ராஜதந்திர வட்டாரங்களில் பெரும் ஆச்சரியத்தை உண்டாக்கியிருந்தன. ஆனல் இந்தப் பத்திரிகைகள் பெயரிட்டழைக்காமல் மறைத்து வைத்திருந்த ராஜதந்திரியை வெளிநாட்டிலாகா அழைக்கவுமில்லை இடிக்கவுமில்லை என்பது இப்போது திட்டவட்டமாகி விட்டது.

சம்பந்தப்படுத்தப்பட்ட வெளிநாட்டு ராஜதந்திரியின் பெயரை உள்நாட்டில் ஒளித்து வெளிநாட்டில் அம்பலப்படுத்திய சிலர் இப்போது இடையில் உள்ளவர்களை முடிந்து வைக்க முனைந்திருக்கிருர்கள் என்று பேச்சடிபடுகிறது. இதற்குக் காரணம் குறிப்பிட்ட ராஜதந்திரி குறிப்பிட்ட செய்தி பொய்யானதென்றும் தம்மை வெளிவிவகார இலாகா அழைத்துப் பேசியது கிடையாதென்றும் அறிக்கை ஒன்றின் மூலம் பகிரங்கப்படுத்தியது தான். வெளிநாட்டிலாகாவும் "அப்படி எதுவும் நடக்கவில்லை" என்று தெரிவித்துள்ளது.

ஒன்றுக்குமேல் ஒன்ருக வந்த மறுப்புக்களை அவதானித்த பத்திரிகை இப்போது மற்றவர்களின் தலைமேல் பழிசுமத்தும் வேலைகளைச் செய்து வருவதுமேலும் ஆச்சரியத்தை உண்டாக்கி வருகிறது.

மலாயாவில் பிறந்த பெண் ஒருவரை விவாகம் செய்த சுதந்திரக்கட்சி எம். பி. ஒருவரை வெளிவிவகார இலாகாவும், குடியேற்ற வெளியேற்ற இலாகாவினரும் படுத்தாத பாடு படுத்தி விட்டதாகத் தெரியவருகிறது. குறிப்பிட்ட எம். பி. இது பற்றி தமது சகாக்களுக்கு வர்ணிக்கையில் "இருதயமில்லாத மனிதர்கள் சிலர் இலங்கையில் இருப்பதாகவும், அவர்கள் வெளிவிவகார இலாகாவில்தானுள்ளார்களென்றும் தெரிவித்து வருகிருர்.

எம். பி. க்கு இவ்வளவு தூரம் ஆத்திரம் வருவதற்குக் காரணம் மலாயாவில் பிறந்தாலும் தமது மனைவி அசல் சிங்கள சமூகத்தைச் சார்ந்தவராகவிருப்பது தானும். பெண்ணுடைய தாய் தந்தையரும் சிங்களவர்கள் தானும்! இப்படி எல்லாம் இருந்தும் வெளிவிவகார இலாகாவினர் தம்மைக் கடைந்தெடுத்து விட்டதாக அவர் ஆத்திரப்படுகிருர்.

●

தமிழரசு எம். பி. ஒருவருக்கும், செனட்டர் ஒருவருக்குமிடையில் இருந்து வந்த தகராறுகள் நீங்கி விட்டதாகவும் இப்போது இருவரும் நல்ல நண்பர்களாகிவிட்டதாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

கையில், மறுபக்கம், கலைஞர்கள் மூலம் சாதி சமய வேற்றுமைகளெல்லாம் மறைந்து வருகின்றன! எதிர்காலத்தைப்பற்றி மிக நம்பிக்கை ஏற்பட்டது.

நேற்றிரவு 12 மணிவரை ஆகாசவாணி, இந்த தெய்வீக இசைவிருந்தை அள்ளி அள்ளி அளித்தது. வாழ்க ஆகாசவாணி!

* * *

பண் சுமந்த பாடற்பரிசு
 படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்
 மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன்மண்
 டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள்
 கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டக்
 கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி
 பாடுதுங்காண் அம்மானய்.

—மாணிக்கவாசகசுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

கோப்பாயிலிருந்து ஒரு கிறிஸ்தவ அன்பர் அனுப்பியுள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:-

'கிறிஸ்து பெருமானின் சமாதானமும் நல்லெண்ணமும், நடராஜப் பெருமானின் அன்பும் ஆனந்தமும், புத்தர் பெருமானின் கருணையும், அல்லாஹ்வின் இரக்கமும் நமது இந்த நாட்டை ஆசீர்வதிக்குமாக! பலவேகயாக்களிலிருந்து நம்மைக் காக்குமாக!"

பலவேகயாக்களைப்பற்றியோ அல்லது வேறு எதைப்பற்றியோ நாம் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. அஞ்சவருவதுமில்லை.

உண்மையில் எல்லாம் வல்ல இறைவனின் கருணையில் பூரண நம்பிக்கை இருப்பவர்கள் எதற்கும் ஏன் கவலைப்படவேண்டும்?

* * *

சங்கடம் என்னவெனில் சமயப் போட்டா போட்டிகள், சமய உயர்வு தாழ்வு எண்ணங்கள், மதமாற்ற முயற்சிகள் இவை, சமய நம்பிக்கைகொண்டவர்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்புமில்லாமல் தடுப்பதுடன், பல அன்பற்ற காரியங்கள் நடப்பதைப் பார்க்கின்ருேம். இதுதான் இன்று நமக்குப் பெரிய ஆபத்து.

பல சமய ஸ்தாபகர்களும் மீண்டும் இவ்வுலகுக்குவந்து, தங்கள் பெயரால் மக்கள் என்னென்ன அன்பற்ற, கருணையற்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனரென்பதையும் இதனல் ஏற்பட்டுள்ள விபரீதங்களையும் நேரில் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? ஒரு மதத்தவர்களுக்குள்ளும் எவ்வளவு பிளவுகள், எவ்வளவு சச்சரவுகள்!

சமய ஸ்தாபகர்கள் இந்த நிலைபற்றி மகிழ்ச்சி கொள்ள முடியாது. இப்பிளவுகளும் போட்டிகளும், தங்களது உண்மை நோக்கத்தையே பாழ்படுத்தி, உலக மக்களுக்குப் பெருந்தீங்குகள் மசய்தைப் பார்த்து பெரிதும் வருந்தக்கூடும்.

இந்நிலையில், பல சமயங்களையும் சரிசமமாக மதித்துச் சமய ஒற்றுமைக்காகப் பாடுபடுபவர்கள், இன்று உலக மக்களுக்கு பெரு நன்மை செய்பவர்களாவர்.

* * *

அதே அன்பர், திருப்பாவையிலிருந்து பல பாசுரங்களைத் தட தடவென்று பாடி, அதன் கருத்துக்களை விளக்கியதைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. பக்திப் பரவசத்தால் பாடிய அவை மக்கள் குலம் அனைத்துக்கும் பொதுவென்ருர் அவர்! சந்தர்ப்பமளித்தால் திருப்பாவைபற்றி பல பிரசங்கங்களைச் செய்யத் தாம் தயாரென்றும் கூறினர். ஒரு கிறிஸ்தவ அன்பர் இப்பாடல்களை மனனம் செய்து பக்தியுடன் ஒப்புவித்ததைக் காண புதிய நம்பிக்கை ஏற்படுவதாக இருந்தது. அவரைக்கொண்டு திருப்பாவைபற்றி பேசச் செய்வது மிகவும் நல்லது. யார் இதற்கு ஒழுங்கு செய்யப்போகிருர்கள்?

* * *

சுமார் 25 ஜதை முதல் நம்பர் நாதசுரக் கலைஞர்கள், திருவையாற்றில் கூடி ஸ்ரீ தியாகராஜரின் 117 வது புண்ணிய திதியில் தங்கள் இசைக்காணிக்கையைச் செலுத்தினர். இதில் விசேஷமென்னவெனில் முஸ்லிம் கலைஞரான ஷேக் சினன மெளலாவும், எவ்வித வேற்றுமை எண்ணமுமில்லாமல் அங்கு வந்து இக்காணிக்கையைச் செலுத்தியதையும், மற்றவர்களும் அவருக்கு நல்லமிடத்ததையும், ஆகாசவாணிமூலம் கேட்டேன். நம்பமுடியவில்லை. ஒரு புறம் மதத்தின் பெயரால் வெறியாட்டங்கள் நடக்

(4-ம் கலம் பார்க்க)

காணு ஜனாதிபதி

# நிக்ரூமாவைக் கொல்ல 5 குண்டுகள் சுடப்பட்டன

## தெய்வாதீனமாக உயிர்தப்பினார்

ஆக்ரா, ஜன. 3

கானு அதிபர் டாக்டர் நிக்ரூமாவை கொலை செய்ய நேற்றிரவு நடைபெற்ற ஒருமுயற்சி தோல்வியடைந்தது. 54 வயதான டாக்டர் நிக்ரூமா அலுவலகத்திலிருந்து வெளியே தனது காருக்கு நடந்துசென்ற போது ஒருநபர் அருகிலிருந்து 5 முறைசுட்டார். ஆனால் டாக்டர் நிக்ரூமா காயம் எதுவுமின்றி தப்பினார். அவரது அருகிலிருந்தமெய்க்காப்பாளர்மீது குண்டுகள் பாய்ந்ததால், காயமடைந்த அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின், மரணமானார். துப்பாக்கி மனிதன் உடனடியாகக் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் கானு அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தும் அரசாங்கத்தின் முடிவுபற்றி இம்மாதம் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஜனாதிபதி நிக்ரூமா அறிவித்திருக்கிறார். இத்திருத்தப்படி கானுவில் ஒருகட்சி அரசாங்கம் அமையும். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளையும், ஹைகோர்ட் நீதிபதிகளையும் பதவிநீக்கம் செய்ய உத்தேச திருத்தம் ஜனாதிபதி நிக்ரூமாவுக்கு அதிகாரம் அளிக்கும்.

# இந்துக்கோவிலிலிருந்து 2 விக்கிரகங்கள் மறைந்தன

## காஷ்மீரில் சம்பவம்

ஸ்ரீநகர், ஜன. 3

காஷ்மீரில் நடைபெற்ற பிரமாண்டமான ஒரு பொதுக் கூட்டத்திற்குப்பின் 11பிரதிநிதிகள் பிரதமர் ஷம்சுதீனைச் சந்தித்து புனிதச்சின்னம் மறைந்தது குறித்து 90 நிமிடநேரம் பேசினர். பின் டில்லியிலிருந்து வந்த இருபெரிய உளவிலாகா அதிகாரிகளையும் அவர்கள் சந்தித்துப் பேசினர்.

சின்னம் மறைந்ததுகுறித்து தீவிர விசாரணைகள் நடைபெற்றுவருவதாய் அறிவிக்கப்படுகிறது. ஸ்ரீநகரில் நடைபெற்ற துக்க அணிவகுப்புஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான ஹிந்துக்களும், சீக்கியர்களும் கலந்து கொண்டனர். பொதுக் கூட்டங்களில் ஹிந்து, முஸ்லிம் தலைவர்கள் சமூகஒற்றுமைபற்றிப் பிரசங்கங்கள் நடத்தினர்.

இதற்கிடையில் ஒரு ஹிந்து ஆலயத்திலிருந்து 2 விக்கிரகங்கள் காணமற்போய் விட்டதாகக் கூறப்படுகிறது.

# லண்டன் மகாநாட்டில் சைபிரஸ் கலந்துகொள்ளும்

## சாண்ட்ஸ் பிரிட்டன் திரும்பினார்

நிக்கோஸியா, ஜன. 3

லண்டனில், ஒரு வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள சைபிரஸ் சம்மதம் தெரிவித்திருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரி திரு. டங்கன் சாண்டஸ் அதிபர் மக்காரியயாவையும், உப அதிபர் டாக்டர் குட்சுக்கையும் சந்தித்துப் பேசியபின் லண்டன் மகாநாட்டில் கலந்து கொள்வதென இரு சாராரும் ஒப்புக்கொண்டனர்.

இம்மகாநாட்டில் பிரிட்டன், கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளும் சைபிரஸிலுள்ள கிரேக்க, துருக்கியப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். திரு. சாண்ட்ஸ் இப்போது நிக்கோஸியாவிலிருந்து பிரிட்டனுக்குத் திரும்பிவிட்டார்.

சைபிரஸ் நிலைமைபற்றி விவாதிக்க "நேட்டோ" நிரந்தரசபை நேற்றுக் கூடியது.

இதற்கிடையில் சைபிரஸில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக ஐ. நா. தலையீட்டை சைபிரஸ்கோராது என ஐ. நா.விலுள்ள சைபிரஸ் பிரதிநிதி கூறினார்.

சைபிரஸுக்கு மேலும் 1000 பிரிட்டிஷ் பாரசூட் துருப்புக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## "சீனாவின் நோக்கம் மாறவில்லை" — ரஸ்க்

வாஷிங்டன், ஜன. 3

சீனா தனது பலாத்கார நோக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை என அமெரிக்க வெளிவிவகாரமந்திரி திரு. டீன் ரஸ்க் கூறினார். சீனப்பிரதமர் சூ-என்-லாய் சமாதான சகவாழ்வு குறித்துப் பேசியபோதிலும் அண்டை நாடுகள் பற்றி சீனாவின் ஆக்கிரமிப்பு நோக்கம் மாறவில்லை என்றார் ரஸ்க். சீனா இந்தியாவைத் தாக்கியதே இதை நிரூபிக்கிறது எனவும் அவர் கூறினார்.

தகராறுக்கான விஷயங்கள் குறித்து அமெரிக்காவும் ரஷ்யாவும் உடன்பாடு ஏற்படுத்த விரைவில் விவாதிக்க இருப்பதாயும் அவர் கூறினார்.

## ஆஸ்திரேலியா 370 ரன்கள்

பிரிஸ்பேன், ஜன. 3

ஆஸ்திரேலியாவுக்கும் தென் ஆபிரிக்காவுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 7 விக்கெட் நஷ்டத்திற்கு 370 ரன்கள் எடுத்தது.

## விநோபாஜி

புதுடில்லி, ஜன. 3

ஆச்சார்யா வினோபாபாவே மத்திய பிரதேசத்தில் 2 மாத பாதயாத்திரையை ஆரம்பித்தார். இரண்டு மாதங்களுக்குப்பின் அவர் மகாராஷ்டிராவில் பாதயாத்திரரை ஆரம்பிப்பார்.

## டிரானாவில் சூ-என்-லாய்

டிரானா, ஜன. 3

சீனப்பிரதமர் சூ-என்-லாய் டிரானாவில் அல்பேனியாத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

## டிகால்

பாரிஸ், ஜன. 3

பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டிகால் வருகிற மார்ச்மாதம் மெக்ஸிகோவுக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்படுகிறது.

## "மகாராஷ்டிரா வேண்டாம்"

புதுடில்லி, ஜன. 3

மதுவிலக்கு விஷயத்தில் தமிழ்நாடு, கேரள அரசாங்கங்கள் மகாராஷ்டிராவின் உதாரணத்தைப் பின்பற்றாது என அந்த ராஜ்யங்களின் முதன் மந்திரிகள் அறிவித்துள்ளனர்.

## பிலாய், ரூர்கலா, துர்க்காபூர் வெற்றி

புதுடில்லி, ஜன. 3

பிலாய் எஃகு ஆலை 1963-ம் ஆண்டு உற்பத்திக்குறியளவை மிஞ்சிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. 12,64,000 டன் தேனிரும்பை சென்ற ஆண்டு அது உற்பத்திசெய்தது. 1964-ம் ஆண்டு வேலைகளுக்காக, இத் தொழிற்சாலையில் 4000 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ரூர்கலா, துர்க்காபூர் ஆலைகளும் அதன் குறியீட்டை எட்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ரூர்கலாவின் உற்பத்தி 13 லட்சம் மெட்ரிக் டன்னாகும்.

தமிழ் நாட்டில் சேலத்தில் அமைக்கப்படவிருக்கும் எஃகு ஆலைக்கான வேலைகள் 2 அல்லது 3 மாதங்களில் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

## மீண்டும் ராஜீய உறவு

கெய்ரோ, ஜன. 3

1956-ம் ஆண்டு சூயஸ் நெருக்கடி காரணமாக பிரான்சுக்கும், ஐக்கிய அராபியக் குடியரசுக்குமிடையே முறித்துக் கொள்ளப்பட்ட ராஜதந்திர உறவு, மீண்டும் இப்போது ஆரம்பித்திருக்கிறது.

## 133 தடவை நுழைந்தனர்

கல்கத்தா, ஜன. 3

கடந்த 11 மாதங்களில் பாகிஸ்தானியர் இந்தியப் பிரதேசத்தில் 133 தடவை நுழைந்திருப்பதாயும், இதனால் ஒருவர் பலியானார் என்றும், 17 பேர் காயமடைந்தனர் என்றும், 22 பேரும், 1100 கால்நடைகள் உட்பட இதரபொருட்களும் கடத்திச்செல்லப்பட்டன என்றும் மேற்கு வங்க முதன் மந்திரி திரு. சென் கூறினார்.

## நேரு — குருஷ்சேவ் வாழ்த்துக்கள்

புதுடில்லி, ஜன. 3

பிரதமர் நேருவும், பிரதமர் குருசேவும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்ட புத்தாண்டு வாழ்த்துக்களில் இரு நாடுகளுக்குமிடையே ஒத்துழைப்பு, நட்புறவு ஆகிய நம்பிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்.

## ஹரிஜனங்களுக்கு முழுநியாயம் வழங்கவில்லை நேரு வருத்தம்

புதுடில்லி, ஜன. 3

விடுதலைக்குப் பின் ஹரிஜன முன்னேற்றம் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டிருக்கிறபோதிலும், ஹரிஜனங்களுக்கு மேலும் வசதியளிக்காமலிருப்பது குறித்துத் தாம் வருந்துவதாக பிரதமர் நேரு ஹரிஜனங்களின் கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

"ஹரிஜனங்களுக்கு முழுநியாயம் வழங்கப்படவில்லை. இதனால் பேசுவதற்கே எனக்குத் தயக்கமாய் இருக்கிறது. ஹரிஜன முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும். ஹரிஜனங்கள் தங்கள் முற்னேற்றத்திற்குத் தடையான பழைய பழக்கங்களை விட்டுவிடவேண்டும்" எனவும் நேரு கூறினார்.

## ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மாண்டார்

புதுடில்லி, ஜன. 3

கடந்த செவ்வாய்க்கிழமை 20 ஆயுத பாணிகளான பாகிஸ்தானியர் போர்நிறுத்த பிரதேசத்திற்குள் நுழைந்து, ஒரு கடையைக் கொள்ளையடித்து ரூ. 3000 பெறுமதியான பொருட்களைக் கடத்திச்சென்றதாக அறிவிக்கப்படுகிறது. ரோந்துப் பொலிசாருக்கும். பாகிஸ்தானியருக்குமிடையேஏற்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒரு இந்திய சப்-இன்ஸ்பெக்டர் மாண்டார்.

# கருணாநிதி, நடராஜன் ஜாமின் நிபந்தனைகள்

## மேலும் தளர்த்த உத்தரவு

சென்னை, ஜன. 3

தி. மு. க. தலைவர்களான திரு. கருணாநிதி, திரு என் வி. நடராசன் ஆகியோரின் ஜாமின் நிபந்தனைகளை ஹைகோர்ட் நீதிபதி திரு. பி.எஸ். கைலாசம் மேலும் தளர்த்தினார்.

குற்றத்தின் தன்மையையும், புலன்விசாரணைகளுக்கு அவர்கள் தடங்கல் செய்வார்கள் என நினைப்பதற்கு இடமில்லை என்பதையும் கவனிக்குமிடத்து, அவர்களுக்கு நிபந்தனை எதவும் விதிகக வேண்டிய அவசியமில்லை என்றும் நீதிபதி கூறினார். நிபந்தனைகளைத் தளர்த்தும்படி அவர் உத்தரவிட்டார். ஹைகோர்ட் நீதிபதி திரு. எம். அனந்தநாராயணனால் சிலநிபந்தனையுடன் அவர்கள் முன்பு ஜாமினில் விடுதலை செய்யப்பட்டனர். காஞ்சிபுரம் செல்ல அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இது காலாவதியாகியது.

திரு. கருணாநிதி தஞ்சை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராதலால் வரும் முனிசிபல் தேர்தல் சம்பந்தமாக அங்கு கட்சியின் சார்பில் யார்யார் அபேட்சாபத்திரங்கள் தாக்கல் செய்கிறார்கள் என்பதைக் கவனித்துக் கொள்வதில் அவருக்கு அக்கறை உண்டு என்றும்எனவே வருகிற 4, 5-ம் திகதி தஞ்சை ஜில்லாவில் தங்கவும், காஞ்சிபுரத்திற்குச் சென்று சிலநாட்கள் தங்கவும் அனுமதிக்க வேண்டும் எனவும் அவர் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

# வள்ளுவர் உருவப்படம்: நேரு திரை நீக்கம் செய்வார்

புதுடில்லி, ஜன. 3

தமிழ்நாடு வரும் பிரதமர் நேரு வருகிற 19-ம் திகதி சென்னை மரினா கடற்கரையில் சுவாமி விவேகானந்தரின் சிலையைத் திறந்து வைப்பார். அமெரிக்காவிலிருந்து சுவாமி விவேகானந்தர் திரும்பியபின், சென்னையில் தங்கியிருந்த வீட்டில் இச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு முதல் தினம் சென்னை அசெம்பிளி மண்டபத்தில் திருவள்ளுவரின் படத்தை நேரு தறந்து வைப்பார்.

ஜனவரி 19-ம் திகதி காலை திருத்தணிக்கு பிரதமர் நேரு ரயில் மூலம் செல்வார். ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் பிறந்த ஊரான அங்கு, அவரது புராதன வீட்டில் கலாச்சார நிலையம் ஒன்றைப் பிரதமர் திறந்துவைப்பார். இந்த வீட்டை ராதாகிருஷ்ணன் பொதுநலனுக்கு நன்கொடையாக அளித்துள்ளார்.

ஜனவரி 20-ம் திகதி திரு. நேரு சென்னையிலிருந்து வரனாசிக்குச் செல்வார்.

## ஜெனரல் தகனம்

ஜாம்நகர், ஜன. 3

நேற்று ஜாம்நகரில் தகனம் செய்யப்பட்ட ஜெனரல் ராஜேந்திரசிங்ஜியின் இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர். அவரது பிரேதம் பம்பாயிலிருந்து படை டகோடா விமானம் ஒன்றில் ஜாம் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. முப்படைத் தலைவர்கள் சார்பாக மலர்வளையங்கள் வைக்கப்பட்டன.

## பீகாரில் அனல் மின்சார நிலையம்

பாட்னா, ஜன. 3

பீகாரில் 135 மெகாவாட் சக்தியுள்ள பரோணி அனல் மின்சார நிலையத்தை முன்னாள் நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் ஆரம்பித்துவைத்தார்.

## மாபெரும் தர்மசக்கரம்

புதுடில்லி, ஜன. 3

சிக்கிம் தலைநகர் கேங்டாக்குக்கு அருகே மாபெரும் தர்மசக்கரம் ஒன்று நிறுவப்படும். இதில் 10 லட்சம் மந்திர வாசகங்கள் பொறிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## சமாதான தீர்வுக்கு ரஷ்யா குறிப்பு

மாஸ்கோ, ஜன. 3

பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்டு பலநாடுகளுக்கு ரஷ்யா அனுப்பியுள்ள ஒரு குறிப்பில் பிரதேச தகராறுகளைச் சமாதான வழியில் தீர்த்துக் கொள்ளவேண்டும் எனக்குறிப்பிட்டிருக்கிறது.

## 'அண்மையில் சீனா இந்தியாவைத் தாக்காது' —நேரு

புதுடில்லி, ஜன. 3

இன்று இந்தியப் பிரதமர் நேரு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் அண்மையில் சீனா இந்தியாவைத் தாக்காது என்றும் தற்பொழுது குளிர்காலமாக விருப்பதே இதற்குக் காரணம் என்றும்கூறினார்.

## 14 ஆழ் சுரங்கம் தோண்டப்படும்

புதுடில்லி, ஜன. 3

தேசிய நிலக்கரிச் சுரங்கக் கார்ப்பரேஷன், 14 ஆழ்சுரங்கங்களைத் தோண்ட முடிவுசெய்திருக்கிறது. 250 லட்சம் டன் நிலக்கரி இதன்மூலம் கிடைக்கும்.

## காகித ஆலை

புதுடில்லி, ஜன. 3

நேபா காகித ஆலை சென்ற ஆண்டு 30,03,000 டன் பத்திரிகைக் காகிதத்தை உற்பத்தி செய்வதாக அறிவிக்கப்பட்டது.

## பிலிப்பைன்ஸ் வருத்தம்

மணிலா, ஜன. 3

வடபோர்னியோவில் நடைபெற்ற இந்தோனேஷிய-மலேஸிய கைகலப்புக் குறித்து பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு மந்திரி வருத்தம் தெரிவித்திருக்கிறார். மலேஸியாவுக்கெதிராக பிலிப்பைன்ஸ் இந்தோனேஷியாவுடன் சேர்ந்து கொண்டிருக்கிறது என்ற கருத்தையும் அவர் மறுத்தார்.

## பாரதம் — ஐ. அ. கு. கப்பல் ஒப்பந்தம்

கெய்ரோ, ஜன. 3

ஐக்கிய அராபியக் குடியரசுக்கும் இந்தியாவுக்குமிடையே 5 ஆண்டு கப்பல் போக்குவரத்து ஒப்பந்தம் ஒன்று கெய்ரோவில் கைச்சாத்திடப்பட்டது.

## பிரிட்டிஷ் தடை

லண்டன், ஜன. 3

ஹாங்காங்கிலிருந்து இந்தோனேஷியாவுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை பிரிட்டன் தடைசெய்திருக்கிறது.

## 220 பேர் திரும்பினர்

பம்பாய், ஜன. 3

காங்கோ ஐ. நா. படையில் கடமையாற்றிய இந்தியவீரர்களில் 220 பேர் நாடு திரும்பியிருக்கிறார்கள்.

கொழும்புத்துறை கொலைவழக்கு

# அட்டர்ணி ஜெனரலுடன் ஆலோசிக்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறை கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி அரசுவரலடன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இன்ஸ்பெக்டர் திரு. கனகசிங்கம் அட்டர்ணி ஜெனரலுடன் ஆலோசிப்பதற்காக வழக்கை ஒத்திப் போடும்படி கேட்டுக் கொண்டார். நீதிபதி, இன்ஸ்பெக்டர் கனகசிங்கத்தின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு வழக்கை இம்மாதம் 7-ம் திகதிவரை ஒத்தி வைத்தார்.

இவ்வழக்கில் சென்ற வருடம் டிசம்பர் மாதம் 24-ம் திகதி ஜோசப் செல்வரத்தினம் என்பவரை சகோதரர்களான கந்தையா ராஜரத்தினம், கந்தையா ஜெயரத்தினம், கந்தையா யோகரத்தினம் ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் மூவர் சார்பிலும், வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் வழக்கை நடத்தினார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த கார்சாரதி பொன்னர் கனகசபை சாட்சியமளித்த போது கூறியதாவது:-

நான் எனது காரை காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எதிரிலுள்ள கருச்சில் மறிப்பது வழக்கம். நானும் கருச்சில் தான் படுப்பேன். 2-வது எதிரி காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் பணியாற்றுகிறார். கடந்த 8 வருடங்களாக அவரை எனக்குத் தெரியும். டிசம்பர் மாதம் 24-ம் திகதி இரவு 8 மணிக்கு நான் எனது கருச்சில் இருந்தேன். 2-வது எதிரி அங்கு வந்து தனது தாயார் வீட்டிற்குப் போவதற்கு காரைவிடும்படிகேட்டார். 2-வது எதிரியுடன் காரில் சென்றேன். காங்கேசன்துறை பட்டினசபைக்கு எதிரே காரை மறிக்கும்படி கூறினார். 1-வது எதிரியும் 2-வது எதிரியின் மைத்துனர் மயில்வாகனமும் காரில் ஏறிக் கொண்டார்கள். இரண்டாவது எதிரி, கரையூருக்கு காரை விடும்படி கூறினார்.

நான் கரையூருக்கு காரைச் செலுத்தினேன். அங்கே 3-வது எதிரி காரில் ஏறிக் கொண்டார். மூன்று எதிரிகளும், பண்டியந்தாழ்விற்கு காரை விடும்படி கூறினார்கள். நான் ஒரு புது வீட்டின் முன்னால் காரை நிறுத்தினேன். அந்த வீடு தங்களின் தாயார் வீடு என்று எதிரிகள் கூறினார்கள். மூன்று எதிரிகளும் வீட்டிற்குள்ளே சென்றார்கள். 10 அல்லது 15 நிமிடங்களுக்கு பின் மூன்று எதிரிகளும் திரும்பிவந்து காரில் ஏறிக் கொண்டார்கள். இரண்டாவது எதிரி கரையூருக்கு காரை விடும்படி கூறினார். அதன் பின் நாவலர் வீதிக்கு காரை விடும்படி கூறினார். அங்கே நாங்கள் சென்றோம். 12-வது எதிரி அங்கே இறங்கினார்.

நீதிபதி: 12-வது எதிரியை எங்கே இறக்கினீர்கள்?

வழக்கறிஞர்: சோமசேகரம் வீட்டில்.

சாட்சி: அதன் பின் நாங்கள் காங்கேசன்துறைக்கு சென்றோம்.

இந்த நேரத்தில் இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் குறுக்கிட்டு, சாட்சி பொலிஸில் கொடுத்த வாக்குமூலத்திற்கு மாறாக சாட்சியமளிப்பதாக நீதிபதியிடம் சுட்டிக் காட்டினார்.

வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் இதை ஆட்சேபித்து சாட்சி பொலிஸிடம் கூறியது தான் உண்மை என்பதற்கு தகுந்த அத்தாட்சி இல்லை என்று கூறினார்.

---

## 'தொழிலாளருக்காக ஒன்று சேரவேண்டும்'

மத்துகம, வெள்ளி

இடதுசாரித் தலைவர்கள் எல்லோரும் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் அழைத்துச் செல்லவேண்டிய இடம் ஒரே இடமாக இருந்தாலும், அழைத்துச் செல்லவேண்டிய பாதைகள் வெவ்வேறாக இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இடதுசாரித் தலைவர்களெல்லாம் ஒரே மேடையில்தோன்றி பேசுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இடதுசாரிக் கட்சிகளிடையே கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் தொழிலாளர்களின் நலனைக் கருதி ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும். இடதுசாரி இயக்கங்கள் சுயநலவிரும்பிகளால் ஆரம்பிக்கப்படவில்லை.

## பைகள் பகிஷ்காரம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

சிங்கள அமுலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கமாக கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்திற்கு துணிகள் வாங்கச் சென்ற பொதுமக்களில் பலரும் சிங்களத்தில் மட்டும் எழுதப்பட்டிருந்த கடதாசி பைகளைப் பெற மறுத்து தாங்கள் கொண்டுவந்த கடுதாசியில் துணிகளைச் சுற்றி சென்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள இரு கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனங்களிலும் கடந்த சில மாதங்களாக சிங்களத்தில் எழுதப்பட்ட பைகளில் மட்டுமே துணிகளைப் போட்டுக் கொடுக்கும் வழக்கமாயிருந்தது. நேற்று முன் தினம் நடந்த சிங்கள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்குப் பின் மக்கள் சிங்களத்தில் மட்டும் எழுதப்பட்டிருக்கும் பைகளை வாங்க மறுத்துவருகிறார்கள். சிலர் துணிகளை பைகளில் போடாமல் கைகளிலேயே கொண்டு செல்கிறார்கள்.

இதுபற்றி கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபன மனேஜரை விசாரித்தபோது அவர் சிங்களத்தில் மட்டும் அச்சிடப்பட்ட பைகள் ஏற்கனவே தங்களுக்கு பெருந்தொகையாக அனுப்பப்பட்டிருப்பதாகவும் தாங்கள் மேலிடத்தின் உத்தரவுப்படியே இவைகளை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

## நத்தாருக்குப்பின் சம்பளம்

குருநாகல், வெள்ளி

வடமேற்கு பகுதியிலுள் அதிகமான பாடசாலைகளில் நத்தார் தினத்திற்குமுன் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாததால், பலர் நத்தார் தினத்தைக் கொண்டாட முடியாத நிலைமையேற்பட்டது.

ஒவ்வொரு மாதமும் 21ம் தேதி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் இப்பகுதியில், சில அதிபர்களும், தலைமை ஆசிரியர்களும்மட்டுமே 21ம் தேதி தங்கள் சம்பளத்தைப் பெற முடிந்தது. மற்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் அனுப்பப்படவில்லை.

---

## பிரிவுபசாரம்

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி வடக்கு நெசவு நிலையத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாகக் கடமையாற்றி புத்தளத்திற்கு மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் திரு. வே. மகாதேவனுக்கு பிரிவுபசார வைபவமொன்று நெசவு நிலைய மாணவிகளால் அளிக்கப்பட்டது.

# மூன்று முக்கிய பிரச்னைகளில் கவனம் செலுத்துக

## மந்திரிகளுக்கு பிரதமரின் புதுவருட உத்தரவு

கொழும்பு, வெள்ளி

வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துவருவதைத் தடுக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், வீடுகள் பற்றாக்குறையை நீக்கவும் ஒரு திட்டத்தை வகுத்து அதை எதிர்வரும் மார்ச் மாதத்துக்கிடையில் அமுல்நடத்த முயற்சி செய்யுமாறு பிரதம மந்திரி தனது மந்திரிகளுக்கு நேற்று முன் தினம் உத்தரவிட்டார். மேற்குறிப்பிட்ட மூன்று விஷயங்கள் சம்பந்தமாகவும் அந்தந்த விஷயங்களுடன் சம்பந்தமுடைய மந்திரிகள் இவற்றில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்றும், மந்திரிசபை பொதுவாகவே இவ்விஷயங்களைத் தீர்த்துவைப்பதில் ஒத்துழைக்கவேண்டுமென்றும் பிரதம மந்திரி தெரிவித்துள்ளார். பொதுமக்களைப் பாதிக்கும் இம்முக்கிய பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதில் மந்திரிசபை தனது முழுச் சக்தியையும் செலவிடவேண்டுமெனவும் பிரதம மந்திரி மந்திரிகளிடம் தெரிவித்தார். வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும் பொருட்டு பெருந்தொகையான இளைஞர்களை விவசாயத்துறையில் ஈடுபடச் செய்யவேண்டும் என்றும், போதியளவு வீடு கட்டுவதற்கு நிலங்களைச் சேகரிக்கவேண்டுமெனவும், கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டுமெனவும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். இப்பொழுது பயிர் செய்யப்படாதிருக்கும் காணிகளைத் திருத்தி பயிர் செய்யவேண்டுமெனவும், புதிய நீர்ப்பாசன திட்டங்களை உருவாக்கவேண்டுமெனவும், காய்கறிகளை அரசாங்கம் சேகரித்துப் பிறகு விநியோகிக்கவேண்டுமெனவும் அப்படிச் செய்வதனால்தான் மக்கள் குறைந்த விலையில் காய்கறிகளை வாங்க முடியுமென்றும் பிரதம மந்திரி தெரிவித்தார். இயற்கை வளங்களைப் பாதுகாத்து, அவற்றிலிருந்து பயனடைவதற்கு முயற்சி செய்யப்படவேண்டுமெனவும், இம் மூன்று மாத காலத்திலும் கட்டிட சாமான்களினதும், உபகரணங்களினதும் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# "உத்தியோக மொழி அமுலினால் ஊழியருக்கு பெருங்கஷ்டம்"

## அரசாங்க குமாஸ்தாக்கள் யூனியன் தலைவர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

உத்தியோக மொழி அமுல் சம்பந்தமான இடமாற்றம் காரணமாகவே எமது அங்கத்தவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று அரசாங்க குமாஸ்தாக்கள் யூனியன் தலைவர் திரு. ரி. பி. திஸநாயக்கா கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு எமது அங்கத்தவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் பல வித கஷ்டங்களுக்கும் உள்ளாகியிருக்கிறார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும், புத்தளம் மன்னார் ஆகிய பகுதிகளுக்கும் அனுப்பப்பட்ட உத்தியோகத்தர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய பின்பும் கொழும்பிற்கோ அல்லது அவர்களின் சொந்த இடத்திற்கோ இடமாற்றம் செய்யப்படவில்லை. இரண்டு வருடத்தின் பின் இடமாற்றம் செய்யப்படுமென இவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தும்கூட இதுவரை இடமாற்றம் செய்யப்படவில்லை.

கல்யாணமாகாத உத்தியோகத்தர்களும், கல்யாணமாகி குழந்தைகளில்லாத உத்தியோகத்தர்களும் இந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்த உத்தியோகத்தர்கள் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை பல தடவை விளக்கிக் கூறியும் இடமாற்றத்தை ஆட்சேபித்த பின்பும்கூட இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்கள் கல்யாணமாகாதவர்களாக இருந்தாலும் குடும்ப பாரத்தை ஏற்றுக்கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

உத்தியோகத்தர்களின் கஷ்டங்களை ஆராயவேண்டுமென்பது அரசாங்கத்தின் உத்தரவாக இருந்தும், சில நிரந்தர காரியதரிசிகளும், இலாகா தலைமை உத்தியோகத்தர்களும் இக்கஷ்டங்களையிட்டு அக்கறை எடுக்காமலிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராகவே இந்த உத்தியோகத்தர்கள், அந்த இடங்களுக்கு செல்ல மறுக்கிறார்கள் என்று கூறி உத்தியோகத்தரின் கஷ்டங்களை ஆராயாமலிருக்கிறார்கள்.

தற்பொழுது தலைமைக் காரியாலயங்களால் கடைப்பிடிக்கப்படும் கொள்கையால் சிங்களப் பகுதிகளில் சிங்கள மொழி அமுல் வெகுவாகபாதிக்கப்படும். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நமது அங்கத்தவர்களின் கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

---

## புலோலிக்கு கருணாரத்ன விஜயம்

பருத்தித்துறை, வெள்ளி

சுகாதாரத்துறை அதிபர் திரு. டபிள்யு. ஏ. கருணாரத்ன புலோலி அரசினர் வைத்தியசாலைக்கும் பருத்தித்துறை சுகாதாரக் காரியாலயத்துக்கும் உத்தியோக பூர்வமாக விஜயம் செய்தார்.

வைத்தியசாலையைப் பார்வையிட்டதுடன் சுகாதாரக் கந்தோரில் நடைபெற்ற மகாநாட்டில் அதிபர் இப்பகுதிச் சுகாதார சேவையைப் பெரிதும் பாராட்டினார். எம். ஓ. எச். திரு. வே. ஜீவநாயகம் அதிபரை வரவேற்றதுடன் சுகாதார சம்பந்தமான தேவைகளையும் எடுத்து விளக்கினார்.

---

## 'வாழ்க்கை செலவை குறைக்கவும்'

கொழும்பு, வெள்ளி

தற்பொழுது அதிகரித்துள்ள வாழ்க்கை செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கும்படி, கிராமப்புறத்திலுள்ள மக்களின் கையெழுத்துக்களைக் கொண்ட ஒரு மகஜரை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க ஐக்கிய இடதுசாரி முன்னணி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய இடதுசாரியின் வாலிப முன்னணி, ஏற்கனவே கையெழுத்து சேர்க்கும் வேலையை கிராமப் புறங்களில் ஆரம்பித்துள்ளது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்க்கை செலவு குறைப்பு கூட்டங்கள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




CIAL

பெற்றுக்கொள்பவரை

ஆனந்தத்திற்குள்

ஆக்குவதுடன்

உபயோகமான

பரிசுமாகும்



ஏகவிநியோகஸ்தர்கள்:-

கொழும்பு ஏஜன்சீஸ் லிமிட்டெட்

தபாற்பெட்டி எண்: 913

2-ம் மாடி, நாஷனல் மியூச்சுவல் கட்டடம்,

சதாம் வீதி, கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 4213 - 15

கிளை:

இல: 34, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 4-1-64

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை — மு. சிவராசா, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 செய்தி 7-10 அறிவிப்புகள், 7-15 மூவர்இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 ஒலிபரப்பு முடிவு

பகல் 12-00 சித்திரகானம், 12-45 செய்தி, 12-55 அறிவிப்புகள், 1-00 கதம்பஇசை, 1-30 ஒலிபரப்புமுடிவு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரை இசை, 6-00 செய்தி. 6-10 விலைவாசிகள், 6-15 கிராமசஞ்சிகை — அர்ச்சுணன் தவப்பேறு, 6-4 கண்டதும் கேட்டதும். 7-00 பாட்டு — மகாராஜபுரம் வி. சந்தானம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-00 செய்தி, 9-10 அறிவிப்புகள், 9-15 பேச்சு — எஸ். செல்வநாயகம், 9-30 வயலின் — நகுலாம்பிகை வேலாயுதன், 10-30 ஒலிபரப்பு முடிவு.

### ஞாயிறு 5-1-64

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 செய்திகள், 7-10 அறிவிப்புகள், 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 இஸ்லாமிய சமயபாடசாலை, 9-30 திரை இசை, 10-00 ஒலிபரப்பு முடிவு.

பகல் 11-30 சிறுவர்மலர், 12-15 நேயர் விருப்பம், 12-45 செய்திகள், 12-55 அறிவிப்புகள், 1-00 மாதர்பகுதி, 1-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 சிறுவர்பகுதி, பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு—ஏ. தர்மலிங்கம், 5-45 திரைக்குரல், 6-00 செய்திகள், 6-10 வாத்திய இசை ,6-15 தாளவாத்திக்கச்சேரி, 6-45 பாட்டு — எம்.எஸ். தங்கவேல்.

இரவு 7-15 வீணை, 7-30 நாடகம் — கலைஉள்ளம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-30 நேயர் கேட்டவை, 9-00 செய்திகள், 9-10 அறிவிப்புகள், 9-15 மாதர் கேட்டவை, 9-45 இசையமுதம், 10-15 நிலைய ஒலிப்பதிவுகள், 10-30 ஒலிபரப்பு முடிவு.

## திருச்சி

### சனி 4-1-64

காலை 6-30 மங்கள இசை, 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-15 தமிழில் செய்தி, 7-30 கீர்த்தனைகள், 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்), 10-30 ஒலிபரப்பு முடிவு.

பகல் 1-00 பிள்ளைக்கனியமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-00 தமிழில் செய்தி, 2-10 கிளாரினெட், 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 3-00 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்), 6-00 அறிவிப்புகள், 6-05 பிராந்திய செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-15 தமிழில் செய்தி, 7-30 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்), 8-30 டில்லி அஞ்சல், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-30 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி — ஜி. என். பாலசுப்பிரமணியம் — பாட்டு, 11-00 ஆங்கிலத்தில் செய்தி, 11-05 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்), 12-00 ஒலிபரப்பு முடிவு.

### ஞாயிறு 5-1-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை. 7-10 அறிவிப்புகள், 7-15 தமிழில் செய்தி, 7-30 கீர்த்தனைகள், 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்), 10-00 ஒலிபரப்பு முடிவு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-00 தமிழில் செய்தி, 2-10 பெண்ணுலகம், 3-00 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்).

மாலை 6-00 அறிவிப்புகள், 6-05 பிரந்தியச் செய்திகள், 6-15 செய்திக்குறிப்புகள், 6-30 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-15 தமிழில் செய்தி, 7-30 கொட்டுமுரசே, 7-45 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்), 8-30 இசைக்கோவை, 8-45 தேசபக்திப்பாடல்கள், 8-55 டில்லி அஞ்சல், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 தியாகராஜ உற்சவம் (அஞ்சல்), 12-00 ஒலிபரப்பு முடிவு.


இவர்களை நாளாந்தம்



லீலா பஞ்சாங்க



சித்திரக்



கலண்டரில் சந்தியுங்கள்

கணிதம்: பிரம்மஸ்ரீ இ. இ. இரகுநாதையர் அவர்கள்

லீலா கலண்டர் படங்கள் எங்கும் கிடைக்கும்

லீலா ஸ்டோர்ஸ்

கொழும்பு 11 போன் 5924/7452


## 5 அடி வளரும் மிளகாய் மரம்!

பேராதனை, வெள்ளி

சாதாரண மிளகாயிலும் பார்க்க 40 பங்கு பயனளிக்க கூடிய ஒரு புதிய மிளகாய் வகையை முன்னாள் மொலடன்ட விதானையார் ரீ. பி. திஸநாயக்கா உற்பத்தி செய்திருக்கிறார். இம்மிளகாய் மூன்று வருடகாலமாக பரீசிலனை செய்யப்பட்டது.

இப்புதிய மிளகாய் மலைநாட்டின் பகுதிகளில் வளர்கிறது. ஒவ்வொரு மிளகாய் மரமும் 5 அடி உயரத்திற்கு வளர்வதோடு, 1000 மிளகாய்களை காய்க்கிறது. ஒரு வருடத்திற்கு மேலாக இம்மரம் வளர்கிறது.

## கற்கோவளத்தில் மூவர் கைது

பருத்தித்துறை, வெள்ளி

கற்கோவளம் கடற்கரையில் வந்திறங்கியதாகக் கூறப்படும் மூன்று சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களை கடற்கரையையடுத்த வெளிப்பிரதேசத்தில் உள்ள ஜயனார் கோவிலுக்கருகில் பொலிசார் கைது செய்தனர்.

இவர்களைக் காப்பாற்றுவதாகக் கூறிய ஒரு வாலிபரே கிராமசேவையாளர் மூலம் பொலிஸாருக்குத்தகவல்கொடுத்ததாகவும் அவர்கள் கொண்டு வந்த சில பொருட்கள் கைப்பற்றப்பட்டு விட்டதாயும் கூறப்படுகிறது.

வர்த்தக சங்க

# "வேலைநிறுத்தத்துக்கு கத்தோலிக்கரே காரணம்"

## பத்திரிகைக் கமிஷன்முன் மெத்தானந்தா சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

"வெளிநாட்டு முதலாளிகளின் ஏஜண்டுகளும், வத்திக்கான் ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகளும் இலங்கை வர்த்தக சங்கத்திலும், தினசரி பத்திரிகைக் காரியாலயங்களிலும் வேலை செய்கிருர்கள். இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிலையில் நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணுவதற்கு முயற்சிக்கிருர்கள்" என்று பௌத்த ஜாதிக பலவேகயாவின் தலைவர் திரு. எல். எச். மெத்தானந்தா நேற்றைய தினம் பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

திரு. மெத்தானந்தா தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

ஏழு வருட முயற்சியின் பின்னர் சிங்கள உத்தியோக மொழியாக்கப்பட்டதும். இன்சூரன்ஸ், பெட்ரோலிய ஏகபோக உரிமைகள் தேசியமாக்கப்பட்டதும் நாட்டிலுள்ள மோசடிகாரர்களை கண்டு பிடிக்க உதவும். தேசிய கண்காணிப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதுமான நாலு முக்கிய நிகழ்ச்சிகள் முதலாம் திகதி நடைபெற்றுள்ள இத்தினத்தில் பத்திரிகைகள் தேசிய உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் 'டெயிலி மிறர்' பத்திரிகை அன்று முதற்பக்கத்தில் வெளியிட்டிருந்த முக்கிய செய்தி மக்களில் ஒருபகுதியினரை அரசாங்கத்துக்கு எதிராக போர் தொடுக்க தூண்டிவிடும் சதியாக உள்ளது. அதன் ஆசிரியராக ஒரு கத்தோலிக்கரே கடமையாற்றுகிருர். அவர் மக்களை ஒன்றும் தெரியாதவர்களாகக்கப் பார்க்கிருர். 'டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு சைத்திரீகர் வரைந்திருந்த கேலிச் சித்திரமும் சிங்கள அமுலைக் கேலி செய்வதாக இருந்தது. இலங்கை வர்த்தக சங்கத்தின் மத்திய கமிட்டியிலும், கிளைச் சங்கங்களிலும் கத்தோலிக்கர்களே பதவி வகிக்கிருர்கள். எனவே அவர்கள் செய்யும் முடிவை எதிர்க்கும் சக்தி பௌத்தர்களுக்கு இல்லாமல் போய்விடுகிறது. அங்கத்தவர்கள் சிலருக்குத் தெரியாமலே வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படடுள்ளது. கத்தோலிக்க தீவிர வாதிகளால் ஆரம்பிக்கப்பட்டு, சிங்கள எதிர்ப்பு வாதிகளால் ஆதரிக்கப்பட்ட வேலைநிறுத்தத்துக்கு பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்து நாட்டில் ஒரு தேசிய நெருக்கடியை உண்டுபண்ண முயற்சிக்கின்றன. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஜனநாயக பத்திரிகைகள் தூண்டிவிடலாமா?

பலவேகயாவின் மற்ருெரு பிரதிநிதியான திரு. ரி. யு.டி.' சில்வா த்திரிகைகள் ஆபாசமான படங்களையும் கட்டுரைகளையும் வெளியிடுவதாகக் குறறம் சாட்டினர்.

# சிங்களக்காசோலைகளால் நோயாளருக்குச் சங்கடம்!

நல்லூர், சனி

சிங்களத்தில் காசோலைகள் தொடர்ந்து அனுப்பப்பட்டால் காங்கேசன்துறையிலுள்ள இரு ஆஸ்பத்திரிகளையும் சேர்ந்த சுமார் 600 நோயாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அரசாங்கத்திற்கு ஆஸ்பத்திரி உணவுப் பொருள் விநியோகிப்பவர்கள் அறித்துழுளதாகத் தெரிகிறது.

விற்பனை இலாகா ஆஸ்பத்திரி உணவு விநியோக காங்கேசன் துறைக்கிளைமூலம் காங்கேசன் துறையிலுள்ள இரு ஆஸ்பத்திரிகளுக்கும் விறகு, பாண், இறைச்சி, ஏனைய உனவுப் பொருட்கள் விநியோகித்து வருபவர்களுக்குரிய காசோலைகள் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளன. இந்த காசோலைகளை யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் மாற்றிக் கொடுக்க மறுத்துள்ளன.

இதனுல் தமக்குக் கிடைத்த காசோலைகளை மாற்றிப் பணம் பெறமுடியாது கஷ்டத்திற்குள்ளாகியிருக்கும உணவு விநியோகஸ்தர்களில் ஒருவரான திரு. க. கோவிந்தன் தமக்கு வந்த காசோலையைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

சிங்களத்தில்வரும் காசோலைகளை மாற்றவேண்டுமானல் வங்கியில் தாமாக ஒரு கணக்கை ஆரம்பிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இதனுல் உணவுப் பொருள் விநியோகிப்பவர்கள் தமக்குரிய காசோலைகளை சிங்களத்தில் அனுப்ப வேண்டாமென்றும் அப்படித் தொடர்ந்து அனுப்பப்பட்டால் தமது சேவைகளை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும் என்று அறிவித்திருக்கிருர்கள். இவர்களின் சேவை நிறுத்தப்பட்டால் இரு ஆஸ்பத்திரிகளிலுமுள்ள சுமார் 600 நோயாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# காங்கேசன்துறையில் சிங்களம்படிப்படியாகஅமுல்!

நல்லூர், சனி

காங்கேசன்துறையிலுள்ள சில அரசாங்க அலுவலகங்களில் சிங்களத்தைப் படிப்படியாக அமுல் நடத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்த தமிழர்களான சப் இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றஞ் செய்யப்பட்டிருப்பதுடன் அவர்களின் இடங்களுக்குச் சிங்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகளாகத் தமிழர்கள் யாருமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காஙகேசன்துறை தபாற்கந்தோரில் புதிதாகச் சிங்கள ஊழியர் ஒருவர் நியமனம் பெற்றுள்ளார். தபால்கந்தோர் உதவி அதிகாரியான இந்தச் சிங்கள ஊழியர் நியமனத்தைத் தொடர்ந்து இத்தபாற்கந்தோரில் சிங்களத் தந்திகள் ஏற்றுக்கொள்ளவும் விநியோகிக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.


## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணுனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,


## வரி விளம்பரம்

### நிருபர் தேவை

திருக்கோணமலை, மூதூர், கல்முனை ஆகிய இடங்களில் நிருபர் தேவை. விண்ணப்பிக்கவும்: ஆசிரியர், "ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

### தேவை

புத்தகங் ளுக்கு நம்பர் அடிப்பதில் அனுபவமுள்ள ஒருவர் உடனே தேவை. 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1834

### தேவை

புளூறிபன் ஹோட்டலில் வேலை செய்வதற்கு சமையல் தெரிந்த பையன்தேவை. விண்ணப்பிக்கவும்: புளூறிபன் ஹோட்டல், 25. கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 1826



### பொதுமக்களே!

உங்கள் கவனத்திற்கு ஆ. சி. சின்னையா நகை மாளிகை.

உங்கள் அழகுமிகு ஆபரணங்கள் நவநாகரீக முறைப்படி குறித்த திகதியில் செய்து உத்தரவாதத்துடன் கொடுக்கும் நம்பிக்கையுடைய நகைமாளிகை ஆ. சி. சின்னையா நகைமாளிகையே!

ஆ. சி. சின்னையா அன் சன்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1697

### ST. John's College Jaffna Welfare Association Chundikuli

The Jaffna Academy, Chundikuli Reopens on 10th. January 1964 Admissions from 6th January to 9th. January.

1831 2nd Jan. 1964

### உப-ஏஜெண்டுகள்

'சொனென் சைன்' பற்றறிகள் (ஜெர்மன் தயாரிப்பு) விற்பனை செய்வதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா, மன்னுர் ஆகிய இடங்களுக்கு உப-ஏஜெண்டுகள் தேவை. விபரங்களுக்கு முருகன் எலக்றிக்கல் ஸ்டோர்ஸ், 6/8, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1804

### மானிப்பாய் மகளிர் கல்லூரி

சேர்தல் விண்ணப்பம் 1964

1965-ம் ஆண்டு நடைபெறும் (G. C. E. Ad. Level Arts) உயர்தர வகுப்புப் பரீட்சைக்குரிய வகுப்பிற் சேர்தற்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படும். விபரங்களுக்கு கல்லூரிக் கந்தோருக்கு விண்ணப்பிக்கவும்

1815 அதிபர்

### காணவில்லை

தில்லையம்பலம் இராசேஸ்வரன் சாந்தகுமாரன் வயது 9. 31-ந் திகதி செவ்வாய்க் கிழமை காணமல் போய்விட்டார். அடையாளம் வெள்ளைக் களிசான், கோடன் சட்டை பொது நிறம். உரும்பிராய் தெற்கு. அறிவிப்பவர்; தி. இராசேஸ்வரன். 1835

# "டெயிலி மிரரை' தடை செய்க!"

## பத்திரிகைக் கமிஷனுக்கு மெத்தானந்தா கோரிக்கை

கொழும்பு, வியாழன்

இன்று காலை நடைபெற்ற பத்திரிகை விசாரணை கமிஷன்முன் பௌத்த ஜாதிக பலவேகயாவின் தலைவர் திரு. எல். மெத்தானந்தா சாட்சியமளிக்கையில், கொழும்பிலிருந்து வெளியாகும் "டெயிலி மிறர்" பத்திரிகையை உடனடியாக தடைசெய்யும்படி கோரியுள்ளார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி "டெயிலி மிறர்" பத்திரிகையில் வெளியான தலைப்புச்செய்தியின் மூலம் அது நாட்டுக்கு, எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறதென்றும் "டெயிலி மிறர்" பத்திரிகையை தடைசெய்யவேண்டும் என்றும் "டெயிலி மிறர்" ஆசிரியர் கத்தோலிக்க தேவாலயங்களின் 'வாய்' என்றும் திரு. மெத்தானந்தா பத்திரிகை விசாரணை கமிஷன்முன் தெரிவித்துள்ளார்.

## சிங்களம் படிப்பவர் மீது நடவடிக்கை

### தமிழரசு வாலிப முன்னணி ஆராயும்

யாழ்ப்பாணம், வெள்ளி

'தனிச்சிங்கள' எதிர்ப்புப் போராட்டத்தைச் சிலர் சிங்களம் படித்து பலவீனப்படுத்துவதற்கு எதிராக எப்படியான தீவிர நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி ஆராயும் பொருட்டு தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியினர் நாளை பிற்பகல் கட்சிக் காரியாலயத்தில் கூடுவரென்று அறிவிக்கப்பட்டுள்ளது

## மகாநாயக்கதேரோ தகனக்கிரியைகள்

கொழும்பு, வியாழன்

காலஞ்சென்ற மகாநாயக்க தேரோவின் சடலம் ஞாயிற்றுக்கிழமை தகனஞ்செய்யப்படும். அன்று நாட்டின் சகல பகுதிகளிலும் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படவேண்டுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) ரஜனி (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (காவலப்பிட்டியா) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) ஜெமினி (குருநாகல)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!

உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!

உணர்ச்சிக் கோர்வையிலே உருவான உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி

எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்

எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

சரவணா பிலிம்ஸ்

பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன்-ராமமூர்த்தி

தயாரிப்பு ஜி. என். வேலுமணி

டைரக்ஷன் கே. சங்கர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

வீரப்பா—ராஜசுலோசனா நடித்த

கைதி கண்ணாயிரம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## 'மலேசியாவை நசுக்க தயாராகுக'

### முப்படைகளுக்கு சுகர்ணோ உத்தரவு

ஜகர்த்தா, ஜன. 2

மலேசியாவை நசுக்க தயாராகவிருக்கும்படி இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ முப்படைகளுக்கும் அறிவித்துள்ளார். மலேசியாவின் நடவடிக்கைகளைத் தடுத்து அதை நசுக்கும்முயற்சிகளில் ஈடுபட முப்படைகளும் தயாராக இருக்கவேண்டுமென்று அதிபர் சுகர்ணோ அறிவித்துள்ளதாக டாக்டர் சுபத்திரியோ இன்று நிருபர்களிடம் தெரிவித்தனர்.

## தி. மு. கழகத்தினர் ஐவர் கைது

சென்னை, ஜன 2

மதுரையில் டெலிபோன் எக்சேஞ்ச் காரியாலயத்துக்கு முன்னதாக மறியல் செய்த ஐந்து திராவிடக்கழகத்தினர் இன்றுகைதுசெய்யப்பட்டனர்.

## கைத்தொழில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தலா 500 ரூபா கொண்ட 100 ஆறுதல் பரிசுகளின் டிக்கட் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 04 L 0007 | 13 T 0364 |
| 14 J 0906 | 16 S 00 79 |
| 04 Q 0654 | 06 K 0864 |
| 17 Z 0366 | 16 D 0344 |
| 11 X 0617 | 04 C 0620 |
| 17 E 0265 | 04 J 0170 |
| 14 B 0742 | 06 A 0837 |
| 06 B 0034 | 09 H 0754 |
| 08 N 0397 | 18 N 0272 |
| 06 F 0775 | 07 V 0173 |
| 01 Y 0795 | 01 N 0411 |
| 16 N 0152 | 06 R 0185 |
| 13 Y 0329 | 08 G 0294 |
| 03 K 0442 | 17 X 0424 |
| 03 A 0527 | 09 N 0970 |
| 15 Z 0691 | 05 M 0246 |
| 15 B 0786 | 16 V 0953 |
| 14 M 0606 | 14 L 0192 |
| 15 H 0957 | 04 L 0847 |
| 14 U 0586 | 13 S 0321 |
| 01 L 0604 | 11 B 0221 |
| 06 G 0857 | 07 Q 0992 |
| 09 V 0016 | 02 Z 0924 |
| 07 N 0843 | 08 P 0658 |
| 04 R 0442 | 16 S 0886 |
| 01 M 0747 | 08 C 0524 |
| 15 W 0861 | 10 C 0673 |
| 13 F 0177 | 19 W 0486 |
| 01 Y 0792 | 17 G 0770 |
| 13 J 0719 | 02 B 0719 |
| 05 T 0842 | 18 H 0587 |
| 12 N 0427 | 11 J 0218 |
| 07 R 0909 | 05 P 0151 |
| 10 I 0613 | 02 R 0503 |
| 12 K 0142 | 10 X 0392 |
| 15 F 0548 | 16 J 0140 |
| 16 Z 0070 | 08 G 0356 |
| 08 T 0648 | 07 V 0425 |
| 01 L 0439 | 07 G 0441 |
| 01 Y 0867 | 02 U 0906 |
| 11 T 0359 | 11 D 0859 |
| 04 L 0288 | 05 Y 0374 |
| 15 W 0147 | 12 R 0995 |
| 08 M 0836 | 14 M 0984 |
| 04 R 0790 | 10 Z 0147 |
| 12 B 0314 | 07 E 0389 |
| 06 F 0964 | 19 A 0254 |
| 12 G 0297 | 01 T 0237 |
| 10 U 0322 | 18 F 0443 |
| 05 U 0141 | 06 A 0150 |

தலா 250 ரூபா கொண்ட 24 ஆறுதல் பரிசுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0879 | 01 M 0879 |
| 01 B 0879 | 01 P 0879 |
| 01 C 0879 | 01 Q 0879 |
| 01 D 0879 | 01 R 0879 |
| 01 E 0879 | 01 S 0879 |
| 01 F 0879 | 01 T 0879 |
| 01 G 0879 | 01 U 0879 |
| 01 H 0879 | 01 V 0879 |
| 01 I 0879 | 01 W 0879 |
| 01 J 0879 | 01 X 0879 |
| 01 K 0879 | 01 Y 0879 |
| 01 L 0879 | 01 Z 0879 |

சிங்கள-தமிழ்

# புதுவருடத்திற்கு அதிக துணிகள் வந்துசேரும்

கொழும்பு, வெள்ளி

சிங்கள தமிழ் புதுவருடத்திற்கு முன்னர் 3 கோடி 25 லட்சம் பெறுமதியான துணிகள் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்துணிகள் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் 1964-ம் ஆண்டுக்குரிய கோட்டாவாகும்.

ஏப்ரல் மாதத்திற்கு முன் துணிகள் வந்து சேருவதற்கான உத்தரவுகளை திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பிறப்பித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் ஜெனரல் மனேஜர், தலைமை இலாகா உத்தியோகத்தர்கள், அமைச்சு அதிகாரிகளைக்கொண்ட மகாநாட்டில் ஏற்கனவே 1 கோடி 6 லட்சம் பெறுமதியான துணிக்கு விண்ணப்பிக்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் இத்துணியில் 1 கோடி பெறுமதியான துணிகள் சிங்கள-தமிழ் புதுவருடத்திற்குப் பின்பே வந்து சேருமென்று தெரிவிக்கப்பட்டது.

புதுவருட தினத்திற்கு முன் எல்லாத் துணிகளும் வந்து சேரக்கூடியதாக நடவடிக்கை எடுக்கப்படுமென மந்திரி தெரிவித்தார்.

## ஜோன்ஸன் உறுதி

வாஷிங்டன், ஜன. 2

தென் வியட்னாமுக்கான அமெரிக்க இராணுவ உதவி தொடர்ந்தளிக்கப்படுமென்றும், தென் வியட்னாம் ஒருபொழுதும் நடுநிலைமை நாடாகாது என்றும் அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் அறிவித்துள்ளார்.

சைகோனில் இராணுவச்சபைத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திபொன்றில் தென்வியட்னாம் நடுநிலைமை நாடாகாது என்றும் தம்மை எதிர்க்கும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை விரட்டியே தீருவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமருக்கு இளைஞர் மகஜர்

நல்லூர், சனி

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு தாவடி சைவ இளைஞர் சங்கம் அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் இந்த நாட்டின் சிறுபான்மை இனமக்களான தமிழ்-முஸ்லிம் மக்கள் மீது அதிகார தோரணையில் அடக்குமுறையாகச் சிங்களத்தை திணிப்பதனைக் கண்டித்துள்ளது.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

பல இன, சாதி, சமய மக்கள் வாழும் ஒரு சுதந்திர நாட்டின் சிறுபான்மை இனத்தின் மீது அவர்கள் விருப்பத்துக்கு மாறாகவும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் மனித உரிமைகள் சாசன அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறாகவும் அச்சபையின் அங்கத்துவ நாடுகளில் ஒன்றான இலங்கை அரசாங்கம் தனது நாட்டுச் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்கள் மீது அதிகார தோரணையில் அடக்கு முறையாக சிங்கள மொழியை ஆட்சி மொழியாகத் திணிப்பதனை எமது சங்கம் மனித உரிமையின் பெயரால் கண்டிக்கின்றது. சிங்கள மொழியை தமிழ் முஸ்லிம் மக்கள் மீது திணிக்காமல் அவர்களது மொழி உரிமையை ஒவ்வொரு சுதந்திர மக்களுக்குமுள்ள உரிமையாகக் கருதியும் நாட்டின் மதிப்பையும் ஒற்றுமையையும் கருதி தமிழ் மொழிக்குள்ள சகல உரிமைகளையும் அந்த மக்கள் அனுபவிக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இந்த மகஜரின் பிரதிகள் மகாதேசாதிபதி, நீதிமந்திரி, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மாதர் முன்னேற்ற சங்கம்

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் மாதர் முன்னேற்றச் சங்கம் புனருத்தாரணம் செய்து வைக்கப்பட்டது. நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி அன்னலட்சுமி நாகநாதர், உப தலைவர்: செல்வி இ. தங்கம், இணைக் காரியதரிசிகாள்: செல்விகள் மு. தாட்சயாணி, கி. மீனம்மா, தனாதிகாரி: அ. மாணிக்கம். 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## 50 வயது பெண் தற்கொலை

கொச்சிக்கடை, வெள்ளி

மகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக நீர்கொழும்பைச் சேர்ந்த 50 வயதான மேரி அன்னு புகையிரதத்தின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

தலுவாகொட்டுவ என்னுமிடத்திலுள்ள புகையிரத கடவையில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

## நிக்ருமாவுக்கு ராதா கிருஷ்ணன் செய்தி

புதுடில்லி, ஜன. 3

கானா ஜனாதிபதி நிக்ருமா கொலை முயற்சியிலிருந்து தப்பியது குறித்து, அவருக்கு இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். "கொலை முயற்சி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். தாங்கள் உயிர் தப்பியது ஆறுதல் அளித்தது. எனது பாராட்டுதல்கள்" என செய்தி கூறுகிறது.

## மாடு திருட்டு; ஒருவர் கைது!

நல்லூர், சனி

கோப்பாயில் ஒருவருக்குச் சொந்தமான நான்கு பசுமாடுகள் களவு போனதையிட்டு கிடைத்த புகாரின் மீது கோப்பாய் பொலிசார் நடத்திய விசாரணையின் போது, அரியாலையில் வைத்து இரு மாடுகளும் ஒரு மாட்டின் தோலும் கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக ஒருவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## கி. ச. உபதேர்தலில் ஒரு பெண் போட்டி

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு கிராமசபையின் 4-ம் வட்டார இடைத் தேர்தலில் இருவர் போட்டியிடுகின்றனர். திருமதி சேதுப்பிள்ளை கதிரேசுவும், திரு குமாரசாமி ஆறுமுகமும் இடைத் தேர்தலில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர்.

வியாபார பெருக விளம்பரம் செய்க